**செ. கு. எண்**:07 **நாள்**:05.01.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5.1.2013

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், விளாங்கோம்பை கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னவீரன் என்பவரின் மனைவி பொம்மி, 29.12.2012 அன்று வண்ணான்பள்ளம் என்ற இடத்தில் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பெரிய தடாகம் கிராமம் அமராவதியைச் சேர்ந்த திரு.லட்சுமணன் என்பவரின் மகன் பழனிச்சாமி 30.12.2012 அன்று ஒதுக்குக்காடு அருகே காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், வீரபாண்டி கிராமம், மூலக்காடு என்ற இடத்தில் 1.1.2013 அன்று நாயக்கன்பாளையம் பாலமலையினைச் சேர்ந்த திரு. ஊசி என்பவர் காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்; அவருடன் சென்ற வீரபாண்டி கிராமம், மருதங்கரையைச் சேர்ந்த திரு. சங்கன் என்பவர் யானை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த திருமதி பொம்மி, திரு.பழனிச்சாமி, திரு. ஊசி மற்றும் திரு. சங்கன் ஆகியோர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான நான்கு நபர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**